**DIRECTORATE OF HIGHER AND TECHNICAL EDUCATION**

**ACHIEVEMENTS/NOTABLE ACTIVITIES FROM *01.04.2018 to 31.03.2019***

- CENTAC, the Centralised Admission Committee for the Medical, Engineering, Law, Veterinary and Agriculture is now extended for the Arts & Science, Polytechnics, Fine arts, Hotel Management and B.Ed/D.El.Ed from the academic year 2018-19.

- 25.63 acres of land of Agriculture Department, Puducherry is transferred to the Directorate of Higher and Technical Education, Puducherry during April 2018 for construction of buildings for PKIET and WPTC, Karaikal.

- Under the Perunthalaivar Kamarajar Financial Assistance Scheme an amount of Rs.30.56 Crore has been spent and 6387 *(Medical (792), Engineering (4857) and Nursing(738))* students have been benefited during the period from April 2018 to Dec 2018.

- Three colleges of this U.T., have been listed by the National Institute for Ranking Framework 2018 as below:

  Pondicherry Engineering College – 53rd rank among the Engineering Colleges.

  Tagore Govt. Arts and Science College – 100-150th position among Arts and Science Colleges.

  Indira Gandhi College for Arts and Science – 100-150th position among Arts and Science Colleges.

- 240 seats were increased in four courses at Pondicherry Engineering College, Puducherry for this academic year 2018-19.

- Efforts are being taken to avail funds from various GOI Schemes such as Star College Scheme for strengthening of Teaching and Training at UG level of Ministry of Science and Technology, GOI, Unnat Bharat Abhiyan(UBA), a scheme of MHRD aimed at making Higher education institutions to provide solutions for problems of villages and Nirbhaya fund scheme of Ministry of Women and Child Development, GOI for Women and Child safety.

- Under the Centrally Sponsored Scheme of Pandit Madan Mohan Malaviya National Mission on Teachers and Teaching (PMMMNMTT), a proposal was sent to MHRD for establishing a Faculty Development Centre at Perunthalaivar Kamarajar College of Education, Karaikal, for imparting training to teachers in Schools and Colleges.

- An amount of Rs.3.00 Cr. was approved in the 12th Project Approval Board meeting of the Centrally Sponsored Scheme "Rashtriya Uchchatar Shiksha Abhiyan (RUSA)" held on 25.05.2018 as preparatory grant to Puducherry State Higher Education Council towards the implementation of the RUSA.

- Further an amount of Rs.26.00 Cr. was approved in the 13th Project Approval Board meeting of the Centrally Sponsored Scheme "Rashtriya Uchchatar Shiksha Abhiyan (RUSA)" held on 30.07.2018 towards starting of a new professional college at Yanam and the first instalment of Rs.7.80 Crore was released by the MHRD during October, 2018.

- Dr. B.R. Ambedkar Polytechnic College, Yanam has got accreditation by the National Board of Accreditation (NBA) during June 2018.

- In order to fulfill the demand from both the students and parents to increase the intake of seats in admission in Arts and Science Colleges in the U.T. of Puducherry, this administration has taken steps and increased 130 UG seats at Tagore Govt. Arts and Science College, Puducherry for this academic year 2018-19.

- An amount of Rs.98.00 lakhs is released towards construction of additional classrooms at Indira Gandhi College of Arts and Science, Kadirkamam, Puducherry.

- College Management System (CMS) has been launched which provides the details of attendance of students and staff. Daily activities on Academic and Non-Academic of students, staff and Institution will also be available. Further, all academic details of the Institution including the courses offered, syllabus, admission details, course coverage, teaching and evaluation process, profile of students and staff will also be available for the public.

- Fellowship to research scholars @ Rs. 70000/- per year (Rs.60,000 for fellowship + Rs.10,000 for contingent grant) hitherto awarded for Tamil, Telugu, Malayalam and French is extended now for the Ph.D Scholars for all subjects who are doing Ph. D in Govt. Colleges from the academic year 2018-19.

---------------

**<u>உயர்கல்வி மற்றும் தொழில்நுட்ப இயக்குனரகம்</u>**

01.04.2018 முதல் 31.03.2019 வரையிலான காலங்களில் **குறிப்பிடத்தகுந்த சாதனைகள்**

- மருத்துவம், பொறியியல், சட்டம், கால்நடை மற்றும் விவசாயப் பாடப்பிரிவுகளுக்கான மையப்படுத்தப்பட்ட சேர்க்கை முறை சென்டாக், 2018-19 கல்வியாண்டு முதல் கலை மற்றும் அறிவியல், பாலிடெக்னிக், ஃபைன் ஆர்ட்ஸ், ஹோட்டல் நிர்வாகம் மற்றும் B.Ed/D. El. Ed பாடப்பிரிவுகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- புதச்சேரி வேளாண்துறையின் 25.63 ஏக்கர் நிலம் காரைக்கால் பெருந்தலைவர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி மற்றும் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கான கட்டிடம் கட்ட, புதுச்சேரி உயர் மற்றும் தொழில்நுட்பத்துறைக்கு கடந்த ஏப்ரல் 2018ல் மாற்றப்பட்டுள்ளது.
- பெருந்தலைவர் காமராஜர் நிதியுதவி திட்டத்தின் கீழ் ரூ.30.56 கோடி செலவிடப்பட்டு 6387 மாணவர்கள் (மருத்துவ மாணவர்கள் – 792, பொறியியல் மாணவர்கள் – 4857 மற்றும் செவிலிய மாணவர்கள் - 738) இந்த நிதியாண்டில் ஜனவரி 2018 முதல் டிசம்பர் 2018 வரையிலான காலங்களில் பயனடைந்துள்ளனர்.
- 2018 ஆம் ஆண்டுக்கான தேசிய கல்லூரி பட்டியல் அமைப்பில் (National Institute of Ranking Framework (NIRF) புதுச்சேரியை சேர்ந்த மூன்று கல்லூரிகள் இடம் பெற்றுள்ளன. அவை பின்வருமாறு:

  பாண்டிச்சேரி பொறியியல் கல்லூரி - 53 வது இடம் (பொறியியல் பிரிவில்)

  தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி – 100-150 இடங்களுக்குள் ( கலை மற்றும் அறிவியல் பிரிவில்)

  இந்திராகாந்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி - 100-150 இடங்களுக்குள் ( கலை மற்றும் அறிவியல் பிரிவில்)

- இந்த 2018-19 கல்வியாண்டில் பாண்டிச்சேரி பொறியியல் கல்லூரியில் நான்கு பாடப்பிரிவுகளில் 240 சேர்க்கை இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின், கல்லூரிகளில் இளநிலை அளவில் கற்பித்தல் மற்றும் பயிற்சியினை மேம்படுத்தும்“நட்சத்திர கல்லூரி” திட்டம், மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின்(MHRD), கிராமங்களில் உள்ள பிரச்சனைகளை களையும் “உன்னாத் பாரத் அபியான்” திட்டம் மற்றும் மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின், மகளிர் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்கான “நிர்பயா நிதி திட்டம்” போன்ற மத்திய அரசின் திட்டங்கள் மூலம் நிதி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- பண்டிட் மதன் மோகன் மாளவியா தேசிய ஆசிரியர்கள் மற்றும் கற்பித்தல் என்ற திட்டத்தின் கீழ், காரைக்கால் பெருந்தலைவர் காமராஜர் கல்வியியல் கல்லூரியில், பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் பயிற்சி பெறும் விதமாக ஆசிரியர்கள் பயிற்சி மற்றும் வளர்ச்சி மையம் உருவாக்குவதற்கு மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்திடம் (MHRD) செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது
- 25.05.2018 அன்று நடந்த மத்திய நிதியுதவி திட்டமான “ராஷ்ட்ரீய உச்சட்டார் சிக்ஷா அபியான் (RUSA)” வின் திட்ட ஒப்புதல் குழு கூட்டத்தில் புதுச்சேரி மாநில உயர்கல்வி சபைக்கு ரூ.3.00 கோடி இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஆயத்த மானியமாக வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- மேலும் 30.07.2018 அன்று நடந்த மத்திய நிதியுதவி திட்டமான “ராஷ்ட்ரீய உச்சட்டார் சிக்ஷா அபியான் (RUSA)” வின் திட்ட ஒப்புதல் குழு கூட்டத்தில் ஏனாம் பகுதியில் புதிய தொழில்முறை கல்லூரி தொடங்க ரூ.26.00 கோடி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, கடந்த அக்டோபர் 2018ல் முதல் தவணையாக ரூ.7.80 கோடி நிதி பெறப்பட்டுள்ளது.

- கடந்த ஜூன் 2018ல் டாக்டர். B.R. அம்பேத்கார் பாலிடெக்னிக் கல்லூரியை, தேசிய அங்கீகார குழு (National Board of Accreditation) அங்கீகரித்துள்ளது.

- புதுச்சேரியிலுள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அதிக சேர்க்கை இடங்கள் ஏற்படுத்திட வேண்டுமென்ற பெற்றோர்/மாணவர் கோரிக்கையை நிறைவு செய்யும் வகையில், இந்நிருவாகத்தின் முயற்சியால் புதுச்சேரி தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 130 இளநிலை சேர்க்கை இடங்கள் இந்த 2018-19 கல்வியாண்டில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

- புதுச்சேரி, கதிர்காமம் இந்திராகாந்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட ரூ.98.00 லட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

- கல்லூரி மேலாண்மை திட்டம் (College Management System(CMS)) தொடங்கப்பட்டுள்ளது. இதில் கல்லூரி மாணவர்கள் மற்றும் அலுவலர்களின் வருகைப்பதிவு விவரங்களை அறியலாம். மாணவர்களின் அன்றாட கல்லூரி மற்றும் இதர பணிகளையும் அறியலாம். மேலும், கல்லூரியின் பாடப்பிரிவுகள், பாடத்திட்டங்கள், சேர்க்கைமுறை, கற்பித்தல் மற்றும் மதிப்பீடு முறை மற்றும் மாணவர்கள்/அலுவலர்களின் சுயவிவரங்கள் போன்றவைகள் அனைவருக்கும் கிடைக்கப்பெறுகிறது.

- ஆராய்ச்சி மாணவர்களுக்கு நிதியுதவி- தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் பிரஞ்சு பயிலும் ஆராய்ச்சி மாணவர்களுக்கு (Ph.D) வழங்கப்பட்டு வந்த வருடத்திற்கு ரூ.70000/- என்ற ஆராய்ச்சி மற்றும் இதரசெலவின உதவித்தொகை (ஆராய்ச்சிக்கான நிதியுதவி – ரூ.60000/- + இதரசெலவின உதவித்தொகை – ரூ.10000/-) அரசு கல்லூரிகளில் உள்ள அனைத்து பாடப்பிரிவுகளுக்கும் இந்த 2018-19 கல்வியாண்டுமுதல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

-------------------------